Shift system in Mint Street Press

* 413 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether three-shift system has been introduced for the workers in the Government Press at Mint street;

(*b*) if so, when it came into force; and

(*c*) the reasons for the same?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) & (உ) இக்கேள்விகள் எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி: சர்க்காருடைய காகிதங்களை வெளி அச்சகங்கள் (பிரைவேட் பிரஸ்ஸஸ்) அச்சிடுகின்றனவே, ஆகவே, சர்க்காருடைய அச்சகத்தை விரிவுபடுத்தி, அதிகப்படியான ஷிப்டுகளை வைத்து வேலை செய்வதால், மேலும் அபிவிருத்தி செய்யக் கூடிய முறையிலே எல்லா காகிதங்களையும் சர்க்கார் அச்சகங்களிலே அச்சிட சர்க்கார் என்ன முயற்சி செய்யும்? இப்பொழுது வெளி அச்சகங்களில் அச்சிட எவ்வளவு செலவாகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 3 ஷிப்டுகளை அரசாங்க அச்சகத்திலே வைக்கலாமா என்பதுபற்றி. இப்பொழுது 2 ஷிப்டுகள் வைத்து அவர்களுக்கு ஓவர்டைம் அலவன்ஸ் கொடுத்துக்கொண்டு வருகிறோம். 3 ஷிப்டுகளாக்குகிறபொழுது தொழிலாளர்களுக்கு ஓவர்டைம் அலவன்ஸ் கிடைக்காது. ஆகவே, தொழிற்சங்கத்தோடு கலந்து பேசிதான் 3 ஷிப்டு முறையை அமுல் படுத்த வேண்டிவரும். 3 ஷிப்டுகள் கொண்டுவரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தை அரசாங்கம் கவனத்தில்கொண்டு செயலாற்றி வரும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்த மின்ட் ஸ்டீரிட்டிலே இருக்கக்கூடிய அரசாங்க அச்சகம் விரிவுபடுத்தப்பட்டதே அப்பொழுது புதிதாக எத்தனை தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்கள். இந்த ஆண்டு அது விரிவுப் படுத்தப்படும் என்று அவர்கள் சொன்னார்களே, அதன்படி

1973 நவம்பர் 26]

அப்படி விரிவுபடுத்தப்படும்பொழுது எத்தனை தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: ஆணைக்கார எஸ்டேட்டின் பகுதியிலே புதிதாக ஒரு கிளை துவங்க இருக்கிறோம். அதிலே எத்தனை தொழிலாளர்களை நியமிப்பது என்ற முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. ஆகவே இப்பொழுது அந்தக் கேள்வி எழவில்லை.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, மின்ட் பகுதியிலே அமைந்திருக்கிற அச்சுக் கூடத்திலே அதை விரிவுபடுத்துவதற்குப் போதுமான இடம் அங்கே இருக்கிறதா? சென்னையிலே உள்ள மவுண்ட் ரோடில் உள்ள கவர்ன்மென்ட் எஸ்டேட்டில் அதனுடைய பிரிவு ஒன்று துவங்கப்படுவதற்கான செயற்குறிப்பு ஒன்று இருந்ததாகச் சொல்லப்படுகிறதே, அப்படி ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அத்தகைய செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி: தலைவர் அவர்களே, அரசு அச்சகத்திலே மூன்றுவது ஷிப்டைக் கொண்டுவந்தால் அதன்மூலம் பல பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்ற அடிப்படையிலேதான் இந்தக் கேள்வி போடப்பட்டிருப்பதாக அறிகிறேன். அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது அப்படிச் செய்தால் அதனுல் தொழிலாளர்களுக்கு ஓவர் டைம் குறைந்துவிடும் என்று சொன்னுர்கள். பொதுவாக ஓவர்டைம் என்று சொன்னுலே பிரத்தியேகமாக வேலை இருந்தால் செய்வதற்குத்தான் ஓவர்டைம் கொடுக்கப்படுவது. ஆனுல் ஓவர்டைம் என்று சொல்லி நிரந்தரமாக ஓவர்டைம் செய்யக்கூடிய தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதை அரசாங்கம் தடுத்து நிறுத்தி நிரந்தரமாக ஓவர்டைம் பணியாற்றுவதைவிட, புதிதாக ஷிப்ட் ஒன்று ஏற்படுத்தி அதன் மூலமாகப் பல பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மூன்றுவது ஷிப்டை ஏற்படுத்துவதன் மூலமாக கூடுதலாக 350 பேர்களுக்கு வேலை கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்

[1973 நவம்பர் 26

களுடைய கருத்து நல்ல கருத்து. ஆனால் தொழிற்சங்கங்கள் இதை ஏற்றுக்கொள்ளுவார்களா என்பதுதான் பிரச்னை. ஏனென்றால் தொழிலாளர்களுக்கு இதன்மூலமாக மாதந்தோறும் கணிசமான தொகை கிடைத்துவருகிறது. அதை வேறுவிதமாக மாற்றவேண்டுமானால் அவர்களோடு கலந்துபேசித்தான் செய்ய முடியும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆணைக்கார எஸ்டேட்டில் மற்றொரு பிராஞ்சு ஆரம்பிக்கப்போகிறோம் என்று சொல்லி பல வருஷங்கள் ஆகின்றனவே, இன்னும் ஏன் துவக்கப்படவில்லை. அதைத் துவக்குவதற்கு துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப் படுமா? கவர்ன்மெண்ட் பிரஸ்ஸில் பெண்களுக்கு வேலை கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது. நகரத்திலே உள்ள பெண் களுக்கு இதிலே வேலை கொடுத்தால் அவர்களுக்கு மிகவும் உதவி யாக இருக்கும், ஆகவே அந்த வகையிலே பெண்களுக்கு அதிகமான அளவில் வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? ஓவர்டைம் வைத்துக்கொண்டிருப்பதால் வேலை யில்லாத் திண்டாட்டத்தை நீக்கமுடியாது. ஆகவே வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ஆணைக்கார எஸ்டேட்டில் துவங்கப்படுவதைப் பொறுத்தவரையில் இயந்திரங்கள் எல்லாம் பொருத்தப்பட்டுவிட்டன. மின்வசதி கிடைத்தவுடன் கூடியவிரைவில் வேலை தொடங்கப்படும். இரண்டாவதாக, பெண்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். அரசாங்க அச்சகத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்குப் போதுமான வாய்ப்பு அளிக்கப்பட்டிக்ருகிறது. அடுத்ததாக, ஓவர்டைம் குறைக்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அந்தக் கருத்தையும் அரசாங்கம் வரவேற்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விகள் சுருக்கமாக இருக்கவேண்டும். ஒரு துணைக்கேள்வியில் கேள்விகள் எண்ணிக் கையும் குறைவாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால்தான் அமைச்சர்கள் நினைவில் வைத்துக்கொண்டு பதில் சொல்ல ஏதுவாக இருக்கும்.

1973 நவம்பர் 26]

டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு இந்த இலாகாவிற்குப் பொறுப்பாக இருந்த மாண்புமிகு என். வி. நடராசன் அவர்கள் சூளைப் பகுதியில் ஒரு பிராஞ்சை ஓப்பன் பண்ணிவைத்து அதைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொன்னார்களே, அது எந்த நிலைமையிலே இருக்கிறது, அதை எப்பொழுது துவங்கப் போகிறார்கள் ? அது துவக்கப்படும்பொழுது எத்தனை பேர்களுக்கு அதிலே வேலை கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சரியான தகவலைத் தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: வளர்ந்து வருகின்ற சென்னை மாநகரத்தினுடைய நெரிசலைக் குறைக்கவேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்டுள்ள நம்முடைய அரசு இப்படிப்பட்ட அச்சகங்களை புறநகர்ப் பகுதிகளுக்கு மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த நல்ல யோசனையின் படியும் இனிமேல் புதிதாகத் துவக்க இருக்கின்ற பிரிவை மறைமலை அடிகளார் நகரில் துவக்கலாம் என்ற கருத்து அரசின் ஆலோசனையில் இருக்கிறது.

Special buses for temple visits

* 414 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to organise visits to the temples in the State by the State Transport Department; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS